OS: 68/2018

Date: 23.01.2025

பெயர்  :அம்சா

**பிரதிவாதி தரப்பு சாட்சி 2 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**குறுக்கு விசாரணை :**-வாதிகள் தரப்பில்

இவ்வழக்கு வாதிகள் யார் என தெரியுமா என்றால் தெரியும், குணசேகரன், ரத்தினம் ஆவார்கள். வாதிகள் எந்த ஊரை சார்ந்தவர்கள் என்றால் தொளசம்பட்டியாக இருக்கலாம் ஞாபகம் இல்லை. இவ்வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ளார்கள் என தெரியுமா என்றால் தெரியும் வாதிகள் வழக்கு சொத்து M.S.பிரகாசம் மூலம் வாங்கிய சொத்து என சொல்கிறார்கள்.  வாதிகள் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை படித்து பார்த்துள்ளேனா என்றால் எனக்கு அவ்வளவு ஞாபகம் இல்லை. என்ன சர்வே எண்ணிற்கு இவ்வழக்கு நடக்கிறது என்றால் சர்வே எண்.171/1 ஆகும். பிளாட் எண்.2 ஆகும்.  அது தற்போது காலி மனையாகத்தான் இருந்து வருகிறது என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் எனது மாமனார் தியாகராஜன் மற்றும் பெரிய மாமனார் M.S. பிரகாசம் ஆகியோருக்கு பூர்வீக வகையில் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். தியாகராஜனும், M.S. பிரகாசமும் இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். தியாகராஜனுக்கு எனது கணவர் தான் ஒரே மகன் என்றால் சரிதான். எனது கணவருடன் பிறந்த சகோதரிகள் எத்தனை பேர் என்றால்  2 பேர் அவர்கள் பெயர் சித்திரா, ஜெயந்தி,  அவர்கள் இதே நீதிமன்றத்தில் தியாகராஜனுடைய சொத்துக்களுக்கு பாகப்பிரிவினை வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் வேறு சொத்துக்களுக்குதான் போட்டுள்ளார்கள். தியாகராஜன் உயிருடன் இருந்த காலத்திலேயே சொத்துக்களை வாய்மொழியாக பிரித்து கொண்டார்களா என்றால்  1952 ம் ஆண்டு தியாகராஜனுடைய தந்தை முருகேச கவுண்டர் பிரித்துகொடுத்துவிட்டார்.

எனது மாமனாரின் சொத்துக்கள் ஓமலூரில் எவ்வளவு பாத்தியப்பட்டுள்ளது என்றால் நிறைய சொத்துக்கள் உள்ளன. என்னென்ன சர்வே எண்களில் சொத்துக்கள் உள்ளது என சொல்லமுடியுமா என்றால் தியாகராஜன் இருக்கும்போதே  சில சொத்துக்களை விற்பனை செய்துவிட்டார். தற்போது இருக்கும் சொத்துக்கள் சர்வே எண்.171/ 1 ல் விஷ்தீரனம் 1 ஏக்கர் 99 செண்ட். 1 ஏக்கர்  99 செண்ட் நிலம் யாருக்கு பாத்தியப்பட்ட நிலம் என்றால் எனது மாமனார் தியாகராஜனுக்கு பாத்தியப்பட்ட நிலம் அது சம்மந்தமாக ஆவணங்கள்

எடுத்து தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்ன ஆவணம் போட்டுள்ளேன் என்றால் 2005 பாகப்பிரிவினை பத்திரம் போட்டுள்ளோம். மேற்படி பாகப்பிரிவினை பத்திரம் பதிவு செய்யப்பட்ட பத்திரமா என்றால் M.S. பிரகாசமும் அவர்களது மகன்கள் எழுதி கொடுத்த பத்திரம் ஆகும். M.S. பிரகாசத்திற்கு எத்தனை மகன்கள் என்றால் 4 மகன்கள் ஆவார்கள்.

**(குறுக்குவிசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்பேரில் ஒத்திவைக்கப்படுகிறது)**

ஒப்பம்/-PW1

ஒப்பம்/- சார்பு நீதிபதி, ஓமலூர்